செ.வெ. எண்: 11 7 நாள்: 08.02.2012

# செய்தி வெளியீடு

**இந்திய விமானப் படையில் தொழில் நுட்பப் பணிகள் மற்றும் தொழில் நுட்பம் அல்லாத பணிகளுக்கு ஆட்கள் தேர்வு – தஞ்சாவூர் அன்னை சத்யா ஸ்டேடியத்தில் 12.2.2012 முதல் 14.2.2012 வரை நடைபெறுகிறது.**

இந்திய விமானப் படையின் தொழில்நுட்பப் பிரிவுகளுக்கும் மற்றும் தொழில் நுட்பம் அல்லாத பணிகளுக்கும் ஆட்களை தேர்வு செய்யும் முகாம் தஞ்சாவூர் அன்னை சத்யா ஸ்டேடியத்தில் 12.2.2012 முதல் 14.2.2012 வரை நடைபெறுகிறது. தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான நிக்கோபார் மாநிலங்களைச் சேர்ந்த, 1.1.1991 முதல் 31.3.1995 க்குள் பிறந்த, திருமணமாகாத இளைஞர்கள் இந்த ஆள் சேர்ப்பு முகாமில் கலந்து கொள்ளலாம்.

பள்ளி மேநிலைத் தேர்வு / இண்டர்மீடியட் (கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களுடன்) அல்லது டிப்ளமோ படிப்பில் மெக்கானிக்கல்/எலக்ட்ரிக்கல்/எலக்ட்ரானிக்ஸ்/ஆட்டோமொபைல்/கம்ப்யூட்டர் சயின்ஸ்/இண்ஸ்ட்ருமென்டேஷன்/இன்பர்மேஷன் டெக்னாலஜி குறைந்தது 50 சதவிகிதம் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றவர்கள் தகுதியுடையவர்கள் ஆவார்கள். இதேபோன்று தொழில் நுட்பம் அல்லாத பணிகளுக்கு பள்ளி மேநிலைத் தேர்வு / இண்டர்மீடியட் ( அறிவியல், கலை அல்லது வணிகவியல் பாடங்களுடன்) அல்லது அங்கீகாரம் பெற்ற பாலிடெக்னிக்கில் ஏதாவதொரு இன்ஜினீயரிங் படிப்பில் குறைந்தது 50 சதவிகிதம் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றவர்கள் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

முகாம் நடக்கும் நாட்களில் காலை 6 மணி முதல் 10 மணிக்குள் விண்ணப்பதாரர்கள் தங்களிடம் உள்ள அசல் சான்றிதழ்கள், எழுது பொருட்கள், பாஸ்போர்ட் சைஸ் வண்ண புகைப்படங்கள் (7 பிரதிகள்) ஆகியவற்றை உடன் எடுத்துவரவேண்டும்.

மேலும் இது தொடர்பான விபரங்களைத் தெரிந்து கொள்ள தொலைபேசி எண். 044–22390561 (அல்லது) 9445299128 யும், வெப்தளம் www.indianairforce.nic.in ஐ தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

––

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**